# மஹர பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மஹர பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 31,221,758 பெறுமதியான காணிப் பரிமாற்றலின் முத்திரைக் கட்டணப் பெறுவனவு மூலதன மானியப் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் முத்திரைக் கட்டண வருமானம் அதே தொகையால் குறைவாகவும் மூலதன மானியம் அதே தொகையால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் 2009 ஆம் ஆண்டுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணமான ரூபா 4,194,825 தொகை சம்பள மீள்நிரப்பற் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சிய ஆயுர்வேத மருந்துப் பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 359,478 இருப்பு மீதிக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் மாதம் அனுப்பிவைக்கப்பட்டவற்றின் மூலம் வங்கிக்குச் செலவு வைக்கப்பட்ட ரூபா 947,000 தொகையான உறுப்பினர் படிப்பணமும் சம்பள மீள்நிரப்பலுமான ரூபா 2,350,000 தொகை கடன்பட்டோராக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ஊருவல்பேருவ அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் படி ரூபா 1,789,183 பெறுமதியான 10 அலகுக் காணி, கட்டிடங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 20 பேர்ச் காணி 1 அலகும் பொது வசதிகளுக்காகக் கிடைக்கப்பெற்ற 07 அலகுக் காணிகளும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நாரங்வல மற்றும் மஹர உப அலுவலகங்களில் காணி, கட்டிடக் கணக்கிற்காக வழங்கப்பட்ட பட்டோலைகளின் 11 காணித் துண்டுகளுக்காக ரூபா 20,346,925 தொகை இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையா தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,092,383 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கணக்குகளின் படியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 137,182,533 ஆனதுடன் அவற்றிற்கு உரித்தான துணைப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 93,221,510 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 43,961,023 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கணக்குகளின் படி மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பு ரூபா 4,512,086 ஆகக் காணப்பட்டதுடன் அன்றைய தினத்தில் களஞ்சியப் பேரேட்டின் படி கையில் காணப்பட்ட இருப்பு மீதி ரூபா 3,864,914 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 647,172 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,164,216 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 34,625,413 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா'000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 5,436 | 5,041 | 10,429 |
| (ii) | வாடகை | 1,911 | 1,485 | 1,947 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 550 | 550 | 153 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி மீதி ரூபா 10,016,836 ஆகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் மஹர உப அலுவலகத்திற்கு உரித்தான ரூபா 10,000 இற்கு மேலான வீதவரி நிலுவை மீதி ரூபா 1,270,993 காணப்பட்டதுடன் இதில் 20 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த நிலுவை மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் நாரங்வல உப அலுவலகத்தின் ரூபா 5,000 இற்கு மேலான வீதவரி நிலுவை மீதி ரூபா 775,357 காணப்பட்டது. இந் நிலுவை மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 முத்திரைக் கட்டணம்**

மேல்மாகாண வருமான ஆணையாளரினதும் 2011 சனவரி 13 ஆம் திகதிய ப்ப/ஆதா/கொ/பொது(1) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் படி முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 03 ஆண்டுகளுக்குள் முத்திரைக் கட்டணம் கோரப்பட வேண்டிய போதிலும் மீகமுவ மற்றும் களுத்துறை காணிப் பதிவாளர் அலுவலகத்தால் நீண்ட காலமாக முத்திரைக் கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்தால் 2011 சனவரி முதல் கணக்காய்வுத் தினமாகிய 2013 மே 09 ஆம் திகதி வரை சேகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்**

அத்தனகல்ல, கம்பஹா நீதிமன்ற அலுவலகங்களிலிருந்து 2011 சனவரி முதல் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

(அ) சபைக்குப் பொது வசதிகளின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள மற்றும் ஏனைய நிறுவகங்களிடமிருந்து பெறப்பட்டுள்ள காணிகளுக்காக

உரித்து உறுதி அல்லது உறுதி பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராத 16 சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டன.

(ஆ) நாரங்வல உப அலுவலகத்திற்கு உரித்தான பிரைம் லான்ட் ஏல விற்பனைக் காணியின் திட்ட இல. 4641 இன் கீழான 3 ஏக்கர் 01 ரூட் 4.59 பேர்ச் திட்டத்தின் 10 சதவீதமான பொதுப் பகுதி ஒன்று ஒதுக்கப்பட்டிராத போதிலும் சபையால் துணைக்கூறாக்கல்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

## 2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

சபைக்குரித்தான 12 பொது வசதிக் காணிகளும் 06 குளிக்கும் கிணறுகளும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது பாளடைந்து காணப்பட்டமை ஊறுவல் பேருவ காணி மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

### தாமதமான செயற்திட்டங்கள்

(அ) மேல் மாகாண அபிவிருத்தி (விசேட) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கிராம எழுச்சி ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை செயற்திட்டத்தின் மூலம் புத்பிட்டிய பொது விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 தொகையான மதிப்பீடு 2012 யூலை 09 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி மதிப்பிடப்பட்ட தொகையில் 20 சதவீதமான 195,904 தொகையான முற்பணத் தொகை 2012 செப்தெம்பர் 13 ஆம் திகதி மஹர பிரதேசச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 மே 02 ஆம் திகதி வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராமையால் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டிற்காகவும் முடிவற்ற நிலையில் காணப்பட்டது.

(ஆ) மேல் மாகாண அபிவிருத்தி (விசேட) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான புத்பிட்டிய பொது மக்கள் மண்டபம் நிர்மாணிப்பதற்காக ரூபா 490,000 தொகை 2012 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேல் மாகாண பிரதம செயலாளரின் 2013 ஏப்ரல் 01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இச் செயற்திட்டம் 2013 இல் குறைவேலையாக்கப்பட்டிருந்தது. இதன் படி 2013 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் சகல கொடுப்பனவு நடவடிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 மே 02 ஆம் திகதி வரையிலும் செயற்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு